# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

***********

முறையீட்டு மனு எண்.225/2018/பே
ஆணை நாள்: 09–01–2020.

திரு E. கோவிந்தராஜன்,
எண்.10, திருவீதியம்மன் கோயில் தெரு,
கிருஷ்ணாபுரம்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி,
காஞ்சிபுரம் மாவட்டம்–603202.

— — முறையீட்டு மனுதாரர்.

திரு எம்.வெங்கடேஷ்,
முன்னாள் செயல் அலுவலர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி
காஞ்சிபுரம் மாவட்டம்.

— — எதிர் மனுதாரர்.

ஆணை.

காஞ்சிபுரம் மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி, கிருஷ்ணாபுரம், திருவீதியம்மன்கோவில் தெரு, எண்.10, என்ற முகவரியில் வசிக்கும் திரு. E. கோவிந்தராஜன், என்பவரின் 25.10.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 29.10.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 225/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் காஞ்சிபுரம் மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.எம்.வெங்கடேஷ் என்பவர் மீது மேற்படி பேரூராட்சியில் அவர் பணிபுரிந்த காலத்தில் கட்டிட அனுமதி வழங்குதல் மற்றும் மின்சார பொருட்கள் கொள்முதல் செய்ததில் பல முறைகேடுகள் செய்துள்ளதாக புகார் தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

07.11.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்பேரில், 16.11.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி, 6–வது வார்டில் அமைந்துள்ள SRM Public School பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கியதில் மேற்படி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.எம். வெங்கடேஷ் லட்சக்கணக்கில் பணம் பெற்றுக் கொண்டு அனுமதி வழங்கியுள்ளதாகவும், அப்பள்ளிக்கு அருகில் பஞ்சமி நிலம் 3 ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாகவும், அதை மறைத்து மேற்படி கட்டிடம் கட்ட பணம் லஞ்சமாக பெற்றுள்ளார் எனவும், இது தொடர்பாக தான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரியமைக்கு தகவல் ஏதும் தனக்கு வழங்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி செயல் அலுவலர் திரு.எம். வெங்கடேஷ், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி 2–வார்டு உறுப்பினர் பதவியிடம் ஆதி திராவிடர் பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டதை மாற்றி, பொதுப் பிரிவாக மாற்றி விட்டார் எனவும், பேரூராட்சி முன்னாள் கவுன்சிலர் திரு.சதீஷ், திரு.தரணி மற்றும் திரு.பா.ரவி ஆகியோர் ஒரே இனம் என்பதால் அவர்களை வைத்து மனைப்பிரிவுகள் அமைத்து வருவதாகவும், திருப்போரூர் செல்லும் வழியில்

உள்ள நிலங்களை விற்பனை செய்வதற்கு பேரூராட்சி செயல் அலுவலர் தரகராக உள்ளதாகவும், பேரூராட்சியில் 250 LED விளக்குகளை ஒரு விளக்கு ரூ.2,500/– க்கு வாங்கியதாக பில் போட்டு விட்டு, 50 விளக்குகளை மட்டுமே அமைத்து மோசடி செய்துள்ளதாகவும், இது போல் பசுமை வீடு திட்டதிலும் லஞ்சம் பெற்றுக் கொண்டு மாடி வீடு உள்ளவர்களுக்கும், தகுதியற்றவர்களுக்கும் வீடு வழங்கியுள்ளதாகவும், இது குறித்தான தகவல்களை முழு அளவில் விரைவில் தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார். எதிர் மனுதாரர் பல பேரூராட்சிகளில் செயல் அலுவலராக இருந்தபோது லஞ்சம் வாங்கி, தனது மனைவி மற்றும் சின்னமாமனார் பெயரில் சொத்துக்கள் வாங்கியுள்ளதாகவும், தான் மேற்படி செயல் அலுவலர் மீது புகார் கொடுத்த காரணத்தினால் மேற்படி செயல் அலுவலரது உறவினர் திரு.குணசேகரன் என்பவர் நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலராக இருந்தபோது, அவரை பயன்படுத்தி தனது மகள் வீட்டினை இடிதது விட்டதாகவும், இது சம்பந்தமாக தக்க நடவடிக்கை எடுக்குமாறும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பசுமை வீடுகள் கட்டும் திட்டம் மற்றும் பயனாளிகள் விவரம் குறித்து கேட்டதாகவும், 6–வது வார்டில் பேரூராட்சிக்கு சொந்தமான கடைகள் ஏலம் விட்டது, கட்டிட அனுமதி வழங்கிய விவரங்கள் கோரியிருந்ததாகவும், ஆனால் விவரங்கள் தனக்கு வழங்கப்படவில்லை எனவும், இது குறித்து மேல் முறையீடு செய்ததில், தான் கோரிய தகவல்களை வழங்க ஆணையிட்டும் வழங்கப்படவில்லை எனவும், இது தொடர்பாக 01.03.2018ல் மாநில தகவல் ஆணையத்திற்கு மனு அனுப்பியுள்ளதாகவும், ஆனால் எந்த பதிலும் பெறப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

28.11.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில், மேற்படிமுறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவுடன் வரப்பெற்ற புகார் மனுக்கள், மற்றும் 16.11.2018 நாளிட்ட வாக்குமூலத்தின் நகலினை நந்திவரம் கூடுவாஞ்சேரி முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் மீதான விளக்கங்கள் மற்றும் எதிர் வாதுரை விவரங்களை சமர்ப்பிக்க அறிவுறுத்தி ஆணையிடப்பட்டதுடன் மேற்படி பொருள் தொடர்பாக 10.01.2019 நாளிட்ட விசாரணைக்கு ஆஜராகவும் ஆணையிடப்பட்டது. இதனடிப்படையில் 10.01.2019 அன்று ஆஜரான நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், மேற்படி நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தான் செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், SRM பள்ளிக்கு கட்டிட அனுமதி வழங்கப்படும்போது, பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் இல்லை எனவும், தான் மேற்படி பள்ளிக்கு கட்டிட அனுமதி வழங்க் லஞ்சம் வாங்கியதாக தெரிவிக்கப்படும் புகாரினை மறுப்பதாகவும், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி, 2–வது வார்டு இட ஒதுக்கீடு (ரிசர்வு) ஆக தன்னால் மாற்றப்பட்டுள்ளது என தெரிவித்திருப்பதும் சரியல்ல எனவும், 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை அரசு ஆணையின்படி சுழற்சி முறையில் மேற்படி இட ஒதுக்கீடு மாறுபடும் எனவும், பழைய LED மின்விளக்குகள் மற்றும் பசுமை வீடுகள் குறித்து மனுதாரர் தெரிவித்துள்ள புகார்கள் யாவும் உண்மைக்கு புறம்பானவை எனவும், தனது பெயரிலும் தனது மனைவியின் பெயரிலும் சொத்து எதுவும் வாங்கவில்லை எனவும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள அவரது மகளின் வீட்டினை தாங்கள் இடிக்கவில்லை எனவும், செங்கல்பட்டு நீதி மன்றத்தில் வீடு இடித்ததாக எந்த வழக்கும் தன் பெயரில் இல்லை எனவும் தெரிவித்துள்ளதுடன் முறையீட்டு மனுதாரரின் வாக்குமூல நகல்களை பெற்றுக் கொண்டு அதன் மீதான தனது அறிக்கையினை விரைவில் சமர்ப்பிப்பதாக தெரிவித்தார்.

பெருங்களத்தூர் பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் திரு.தா.குணசேகரன் தனது 10.01.2019 நாளிட்ட வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் நீர் நிலை புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்பு மட்டுமே அகற்றப்பட்டுள்ளதாகவும், அதிக இடங்களை ஆக்கிரமிப்பு செய்ததாலும், நீர் நிலை புறம்போக்கில் இரண்டு அடுக்கு மாடி வீடு கட்டப்பட்டிருந்ததாலும், அதனை அகற்றியதாகவும், கடந்த 10 ஆண்டுகளாக மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்ததாகவும், மனுதாரரின் மகள் திருமதி பூர்ணிமாவின் வீட்டினை தாங்கள் இடிக்கவிலலை எனவும், மனுதாரரின் மனுவில் கூறியுள்ள அனைத்து விவரமும் உண்மைக்கு மாறனவை எனவும் தெரிவித்துள்ளார். தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள விவரங்களுக்கான 10.01.2019 நாளிட்ட அறிக்கையினையும் பெருங்களத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார்.

முன்னாள் நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 30.05.2019 நாளிட்ட கடிதத்தில் முறையீட்டு மனுதாரரது முறையீட்டு மனுக்கள் மற்றும் 16.11.2018 நாளிட்ட வாக்குமூலத்தில்

குறிப்பிட்டுள்ள புகார்களுக்கான பதிலறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கையின் நகலினை 14.06.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் அதன் மீதான முறையீட்டு மனுதாரரின் விளக்கங்கள்/ஆட்சேபணைகளை தெரிவிக்க ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது 27.06.2019 நாளிட்ட கடிதம் மூலம் நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலரது 30.05.2019 நாளிட்ட அறிக்கையின் மீதான தனது கருத்துக்கள் மற்றும் விளக்கங்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

03.07.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரது 30.05.2019 நாளிட்ட விளக்க கடிதம், அக்கடிதத்தின் மீதான முறையீட்டு மனுதாரரின் 27.06.2019 நாளிட்ட ஆட்சேபணை/விளக்க அறிக்கை நகல்கள் ஆகியவற்றினை காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, இவற்றின் மீது உரிய தல ஆய்வு மேற்கொண்டும், பேரூராட்சி ஆவணங்களை பரிசீலித்தும் அதற்கான அறிக்கையினை உரிய குறிப்புகளுடன் சமர்ப்பிக்கத் தெரிவித்து 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 21.11.2019 நாளிட்ட கடிதத்தில் மேற்படி முறையீட்டு மனுதாரரின் முறையீடு, நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவ்வறிக்கையின் மீதான மனுதாரரின் ஆட்சேபணை/விளக்க அறிக்கைகளின் பேரில் நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சியில் 21.11.2019 அன்று பேரூராட்சி ஆவணங்களை ஆய்வு செய்ததாகவும், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சியில் புகாருக்குட்பட்ட செயல் அலுவலர் திரு.ம.வெங்கடேஷ் என்பவர் 01.05.2017 முதல் 13.07.2017 வரை பணிபுரிந்துள்ளதாகவும், மேற்குறிப்பிட்ட காலங்களில் பேரூராட்சியின் பொது சுகாதார நலன் கருதி, தேவையான பொருட்கள் கொள்முதல் செய்ய ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி மூலம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தேவையின் அடிப்படையில் அவ்வப்போது பொருட்கள் வாங்கப்பட்டு, உரிய இருப்பு பதிவேடுகளில் வரவுகள் பதியப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களுக்கான பட்டியல் தொகை உரிய விதிமுறைகளை பின்பற்றி சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில் கூடுதல் தொகை ஏதும் வழங்கப்படவில்லை என்பதுடன், முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை எனவும், இது தொடர்பாக உள்ளாட்சி நிதி தணிக்கைத் தடை ஏதும் நிலுவையில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட நெல்லிகுப்பம் சாலையில் திருவாளர்கள் SRM Public School என்ற கல்வி நிறுவனத்திற்கு, திருவாளர் SRM Trust என்ற நிறுவனம் அனுமதி கோரி 20.05.2015 மற்றும் 24.11.2016 ல் அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, 07.12.2016ல் ஒப்புதல் பெறப்பட்டதாகவும், அதனடிப்படையில் பேரூராட்சி கட்டிட அனுமதி எண்.29/2016–17 நாள் 08.12.2016ன்படி கட்டிட அனுமதி, பேரூராட்சி செயல் அலுவலர் திரு.மா.வெங்கடேஷ் என்பவரால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

விதி மீறிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது தொடர்பான பிறிதொரு முறையீட்டு மனு தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் ஏற்கனவே 25.09.2018ல் பிறப்பித்த ஆணைகளுக்கிணங்க, சம்பந்தப்பட்ட பேரூராட்சி ஆவணங்களை ஆய்வு செய்த சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரக ஆய்வு அலுவலரின் அறிக்கை, மற்றும் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் திரு.மா.வெங்கடேஷ் என்பவர் மீது சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரால் தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 17 (b) ன் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு, குற்றச்சாட்டு குறிப்பாணை 29.10.2019ல் பிறப்பிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட செயல் அலுவலருக்கு சார்வு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டு குறிப்பாணையில் தெரு மின்விளக்கு பொருட்கள், பராமரிப்பிற்காக மின் உதிரிப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்ட நிகழ்வில் முறையாக ஒப்பந்தப்புள்ளி

நடைமுறைகளை பின்பற்றாமல் செலவினம் மேற்கொண்டது தொடர்பாகவும் குற்றச்சாட்டுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தனது அறிக்கையில் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரரான நந்திவரம் கூடுவாஞ்சேரி முன்னாள் செயல் அலுவலர் திரு.மா.வெங்கடேஷ் ஆகியோரின் வாக்குமூலம், முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலத்தின் மீதான எதிர் மனுதாரரின் அறிக்கை, அவ்வறிக்கையின் மீதான மனுதாரரின் ஆட்சேபணை விளக்க அறிக்கை, இவைகளின் மீது காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் தல ஆய்வு அறிக்கை ஆகியன இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி பகுதியில் விதிமீறிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது தொடர்பாகவும், தெருவிளக்கு மின் பொருட்கள், பராமரிப்பிற்காக மின் உதிரி பொருட்கள் கொள் முதல் செய்யப்பட்ட நிகழ்வில் முறையான ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் பின்பற்றப்படாமல் செலவினம் மேற்கொண்டு முறைகேடுகள் செய்ததற்காகவும், புகாருக்குட்பட்ட செயல் அலுவலர் திரு.மா.வெங்கடேஷ் என்பவர் மீது பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களால் தமிழ்நாடு குடிமை பணி விதிகளில், விதி 17(ஆ)ன் கீழ் குற்றக்குறிப்பாணை 29.10.2019ல் பிறப்பிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலருக்கு சார்வு செய்யப்பட்டு, துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதனை பதிவு செய்து, இப்பொருள் தொடர்பான இம்முறைமன்ற நடுவ தொடர் நடவடிக்கையை கைவிடலாம் என முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும் மேற்படி ஒழுங்கு நடவடிக்கை குறித்தான முடிவு அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 09 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்

1.திரு E. கோவிந்தராஜன்,
எண்.10, திருவீதியம்மன் கோயில் தெரு,
கிருஷ்ணாபுரம்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி,
காஞ்சிபுரம் மாவட்டம்–603202

2.திரு.எம்.வெங்கடேஷ்,
(முன்னாள் நந்திவரம் கூடுவாஞ்சேரி
பேரூராட்சி செயல் அலுவலர்)
செயல் அலுவலர்,
சிட்லபாக்கம் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

3.செயல் அலுவலர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

4.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சிபுரம் மண்டலம்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
காஞ்சிபுரம்

5.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–28

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்).